
# இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்



## கத்தோலிக்கக் கீழைச் சபைகள்

வெளியீடு:

**புனித சின்னப்பர் குருத்துவக்கல்லூரி**

**திருச்சி-1.**

112

Q62
N67
220731

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம்

இலத்தீனிலிருந்து தமிழாக்கப்பெற்ற

# கத்தோலிக்கக் கீழைச் சபைகள்

பற்றிய

# தீர்மானத் தொகுப்பு


சங்க ஏடுகள் மொழிபெயர்ப்புக் குழு

—இறையியல், இலத்தீன், தமிழ் அறிஞர்களின் துணையுடன்—

புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி, திருச்சி.

திரு இருதயக் கல்லூரி, செண்பகனூர்.

பாப்பரசர் குருத்துவக் கல்லூரித் தமிழ்க் கழகம், பூனா.


க கீ—1.

அச்சிடலாம் :

✠ ஜேம்ஸ் மெண்டோன்சா,
திருச்சிராப்பள்ளி ஆயர்,
ஆகஸ்ட் 15, 1967.

புனித சூசையப்பர் தொழிற்பள்ளி அச்சகம், திருச்சி—1.

# உட்புகுமுன்

கத்தோலிக்கக் கீழைச் சபைகள் பற்றிய தீர்மானத் தொகுப்பு 'ஓரியெந்தாலியும் எக்ளேசியாரும்' எனவும் அழைக்கப்பெறுகிறது. இத்தொகுப்புத் தன்னகத்தே கொண்டுள்ள கிறிஸ்தவ ஒன்றிப்பு உணர்வும் கத்தோலிக்கக் கண்ணோட்டமும் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன.

இவ்வேட்டைத் தயாரிக்க ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு தந்த விவாதத் தொகுப்புப் பலருக்கும் மனநிறைவு அளிக்கவில்லை. எனவே, கீழைச் சபைகளுக்கான ஆணைக்குழு, இறையியல் ஆணைக்குழு, கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகம் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டுப் புதியதொரு விவாதத் தொகுப்பைத் தயாரித்துத் தந்தன. பற்பல திறனாய்வுகளுக்குப்பின் திருத்தங்களுடன் 1964ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 10ஆம் நாள் சங்கத் தந்தையரிடம் அளிக்கப்பட்டது. அவர்களின் புதுக் கருத்துக்களுடன் மீண்டும் ஒருமுறை திருத்தம்பெற்று அதே ஆண்டு நவம்பர்த் திங்கள் 21ஆம் நாள் இறுதி வாக்கெடுப்புக்கு இத்தொகுப்பு விடப்பட்டது. 2110 பேர் அதை ஏற்க, 39 பேர் மட்டும் எதிர்த்து வாக்களித்தனர். 1965 சனவரித் திங்கள் 22ஆம் நாள் இந்த ஏடு செயல்முறைக்கு வந்தது.

இத்தொகுப்பு 30 எண்களைக் கொண்டுள்ளது. சில மொழிபெயர்ப்புக்களில் அடிக் குறிப்புக்களை விட்டுவிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், இவ்வாறு விட்டுவிடுவது ஒரு பெருங் குறை. ஏனெனில், அதிகாரப்பூர்வமான ஏட்டில் உள்ள பல விளக்கம் தரும் தகவல்களை நாம் அறியமுடியாது போகிறது.

## இத்தீர்மானத் தொகுப்பின் தன்மை

பண்டைய கீழைச் சபைகளின் மரபையும் நிலையையும் எடுத்தியம்புகின்றது இந்த ஏடு. திருச்சபையின் பல்வேறுபட்ட வழிபாட்டு முறைகள், அவைகளிலுள்ள விசுவாசிகளின் எண்ணிக்கை எவ்வளவாக இருப்பினும், சம மதிப்பையும் உரிமைகளையும் கொண்டுள்ளன. கீழை வழிபாட்டு முறைகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாய் அமைந்திருந்த பல்வேறு அரசியல், பண்பாட்டு, வரலாற்று, சமய சம்பந்தமான காரணங்களை இத்தொகுப்பு எண்ணத்தில் கொண்டுள்ளது. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே நடந்த அரசியல் போராட்டங்களும் இஸ்லாமியரின் ஆதிக்கமும் அந்நாடுகளிலே திருச்சபையைப் பெரிதும் பாதித்தன. அங்குக் குடியேறிய மேலைநாட்டார் பல குழப்பங்களையும் கீழைச் சபையினரிடையே கிளப்பிவிட்டனர். ஏனெனில், இவர்கள் இலத்தீன் வழக்கத்திற்கு மாறான எல்லாவற்றிலும் திரிபுக்கொள்கை இருக்கிறது

என்று ஐயுற்றனர். இலத்தீன் வழிபாட்டு முறையே மற்ற எல்லா வற்றிலும் முதன்மை வாய்ந்தது எனத் தப்பெண்ணம் கொண்டிருந் தனர். கீழைச் சபைகளின் உண்மைப் பாரம்பரியங்களை வரவேற்று நின்றன பாப்புவின் பல அறிவிப்புக்கள். இருப்பினும், திருச்சபை யின் பல்வேறு ஆட்சித் துறைகள் தீட்டிய தீர்மானங்கள் மேலே கூறப்பட்ட அறிவிப்புக்களுக்கு இசைந்தனவாக எப்பொழுதும் இருக்க வில்லை. திருச்சபை சார்ந்த கல்வி, குருத்துவப் பயிற்சி, திருஆட்சி ஆகியவற்றில் இலத்தீன் சபையினர் கீழைச் சபையினரின்மேல் கொண்டிருந்த பெரும் செல்வாக்காலும், தவிர்க்கமுடியாச் சில சூழ் நிலைகளாலும் பல வேளைகளிலும் வெளியார் கீழைச் சபையாரின் காரியங்களில் தலையிட நேர்ந்தது. 1600ஆம் ஆண்டிலிருந்து இந்த நூற்றுண்டின் தொடக்கம்வரை இந்தியாவில் உள்ள கீழைச் சபை யிலே காணக்கிடந்த மாற்றங்களும் பிளவுகளும் இவ்வகைக் குழப்பங் களுக்கு ஏற்ற ஓர் எடுத்துக்காட்டாக நிற்கின்றன. ஆனல், இன்று திரு ஆட்சிபீடம் ஒரு சபைக்கு அதே வழிபாட்டு முறையைச் சார்ந்த ஆயர்களையே அளிக்கிறது; கீழை வழிபாட்டு முறைகளிலிருந்து பொருத்தமற்ற கூறுகளை விடுவித்து அம்முறைகளை மீண்டும் வழக் கிற்குக் கொணருகிறது; திருஆட்சிபீடத்தின் இப்போக்கு சிறந்த ஒரு முன்னேற்றமாகும்; பயன் விளைவிக்கக்கூடிய ஒரு வளர்ச்சியாகும்.

கீழைச் சபைகள் மறைமுதுவரைக் கொண்டிருக்கும் புனிதப் பாரம்பரியத்தைத் தீர்மானத் தொகுப்பு ஏற்றுக்கொள்கிறது. மறை முதுவர் என்ற சொல் கிறிஸ்தவ மறையின் முக்கிய வட்டாரங்களி லுள்ள ஆயர்களுக்குமட்டும் உரியதாக இருந்தது. உரோமை, அந்தியோக்கியா, அலெக்ஸாந்திரியா, எருசலேம், கான்ஸ்தாந்தி நோபிள் ஆகிய இடங்களிலுள்ள ஆயர்கள் மட்டுமே மறைமுதுவர் களாக நியமிக்கப்பெற்றனர்; இவர்களுள் உரோமை ஆயர் உயர்ந்த வராக விளங்கினா. "மறைமுதுவர்கள் தங்கள் மன்றங்களோடு சேர்ந்து, தங்கள் ஆட்சி வட்டாரத்தில் நிகழும் எல்லாக் காரியங் களின்மேலும் உயர்த்த அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். அத்தோடு புதிய மேற்றிராசனங்களை உருவாக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. அதே சமயத்தில் தங்கள் ஆட்சி வட்டாரத்தின் எல்லைகளுக் குள் தம் வழிபாட்டுமுறை ஆயர்களை நியமிக்கும் உரிமையும் அவர் களைச் சார்ந்தது. ஆனல், ஒவ்வொரு காரியத்திலும் தலையிடுவதற்கு உரோமை ஆயர் கொண்டுள்ள மாற்றமுடியாத உரிமைக்கு ஊறு நேரக்கூடாது" (எண். 9). மறைமுதுவர்களற்ற கீழை வழிபாட்டு முறைகளில் உயர் பேராயர் தமது வழிபாட்டுக்குப் பொறுப்புடைய வராய் இருக்கிறர். புதிய மறைமுதுவர் ஆட்சி வட்டாரங்களை ஏற் படுத்தவும் இத்தீர்மானத் தொகுப்பு விரும்புகின்றது.

## திருவருட்சாதனங்கள் பற்றிய ஒழுங்குமுறை:

திருவருட்சாதனங்களைப் பற்றிய முக்கியமான சில காரியங்களை இத்தீர்மானத் தொகுப்புத் தீர்மானித்துள்ளது. குருக்கள் உறுதிப்

பூசுதல் எனும் திருவருட்சாதனத்தை அளிப்பது கீழைப் பாரம்பரியம். இப்பாரம்பரியம் வழக்கொழிந்த இடங்களில் இது மறுபடியும் வழக்கிற்குக் கொண்டுவரப்படுகிறது (எண் 13). ஞாயிறு அல்லது திருவிழா நாட்களில் திருப்பலி காணும் கடமையை எளிதாக ஆற்றுவதற்காக, விசுவாசிகள் முந்தியநாள் மாலையிலிருந்து ஞாயிறு அல்லது திருவிழா நாளின் முடிவுவரை இந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியும் (எண் 15). சில கீழைச் சபையினரிடையே நிலையான திருத்தொண்டர்நிலை வழக்கொழிந்திருந்தது. இப்போது இதனை மீண்டும் வழக்கிற்குக் கொணரவேண்டும் (எண் 21). உண்மைத் திருமணத்திற்கான ஒழுங்குமுறை பற்றிய சட்டத்தைப் புதுப்பிக்கிறது எண் 18: ''இத்தகைய திருமணங்கள் செல்லத்தக்கவையாக விளங்க, பிற விதிகளைக் கடைப்பிடிப்பதுடன் திருப்பணியாளர்முன் நடைபெற்றால் போதும்.''

## கிறிஸ்தவ ஒன்றிப்பு, மறைப் போதக நோக்கங்கள்:

இத்தீர்மானத் தொகுப்பு, கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய தீர்மானத் தொகுப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இதன் கருத்துப்படி கீழைச் சபைக் கத்தோலிக்கர் கீழை நாட்டு மக்களாகவே விளங்க வேண்டும். இவர்கள் கத்தோலிக்கர் அல்லாதார் நடுவிலும் கிறிஸ்தவர் அல்லாதார் நடுவிலும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டும். இவ்வாறு கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான வித்தைத் தூவ வேண்டும். கீழைச் சபைப் பழம் மரபின் வாரிசுகள் என்ற முறையில் அவர்கள் தங்களின் பரம்பரைச் செல்வங்களில் பற்று கொண்டிருக்க வேண்டும்.

திருச்சபையின் ஒற்றுமை அது ஒரே வகையாக இருப்பதில் அடங்குவதில்லை என்று இத்தீர்மானத் தொகுப்பு நமக்கு நினைவூட்டுகின்றது. ''ஏனெனில், ஒவ்வொரு தனிப்பட்ட சபையின் அல்லது வழிபாட்டு முறையின் பாரம்பரியங்களையும் முழுமையாகக் காக்க வேண்டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் எண்ணம்'' (எண் 2). சிறு கீழைச் சபைக் குழுக்கள் இலத்தீன் வழிபாட்டு முறை என்னும் பெரும் ஆழியில் ஒன்றுக்கப்பட்டு அவற்றின் உருவை இழந்துவிடும் என்ற கருத்து கத்தோலிக்கரல்லாக் கீழை மக்களிடம் இருக்கின்றது என்பது உண்மை. இவ்வேடு இந்தக் கருத்தைத் திருத்துகின்றது; கீழைச் சபைகள் பாதுகாக்கப்படவும் வளர்ச்சி பெறவும் உரிமை பெற்றுள்ளன என்று வலியுறுத்துகின்றது. உண்மையில் ஆயிரக்கணக்கான கீழைச் சபைக் கத்தோலிக்கர்கள் தங்கள் வழிபாட்டுமுறை மேற்றிராசனங்களுக்கு வெளியே வாழ்கின்றார்கள். போகும் இடமெல்லாம் தங்கள் சபையை நிறுவி முன்னேற்றும் கத்தோலிக்கரல்லாச் சகோதரர்களை இவர்கள் சிலவேளைகளில் பின்பற்றுகின்றார்கள். இதைப்பொறுத்தவரையில் விசுவாசிகளின் ஆன்மீகத் தேவைகளுக்கு அவசியமானால் பங்குகளையும் திருஆட்சி அமைப்புக்

களையும் நிறுவவேண்டும் என்று தீர்மானத் தொகுப்புக் கூறுகின்றது (காண். எண் 4). மறைமுதுவர், பேராயர் ஆட்சி வட்டாரங்களுக்குப் புறம்பே மேற்றிராசனங்கள், பங்குகளை நிறுவுதல் திருப்பீடத்திற்கே உரித்தானது (திருச்சபைச் சட்டம் 261—262, 'க்ளேரி சாங்க்தித் தாத்தி').

இலத்தீன் வழிபாட்டுமுறைத் துறவறச் சபைகளில் சேர்ந்துள்ள கீழைச் சபைக் கத்தோலிக்கர் பலர் உள்ளனர். கீழை வழிபாட்டு முறையைச் சார்ந்த துறவற இல்லங்களும் மாநிலங்களும் அமைக்குமாறு இத்துறவறச் சபைகள் கனிவுடன் அறிவுறுத்தப்பெறுகின்றன (எண் 6).

மறை பரப்பு நாடுகளில், எடுத்துக்காட்டாக இந்தியாவில், கீழைச் சபைகளை வருத்தும் பிற சிக்கல்களும் இருக்கின்றன. விசுவாசப் பரம்புதல் சபையின் அதிகாரத்தின் கீழுள்ள இலத்தீன் வழிபாட்டு முறை மேற்றிராசனங்கள் கீழைச் சபைகளின் மறைபரப்புப் பகுதிகளைச் சுற்றியிருக்கின்றன. இத்தகைய மேற்றிராசனங்களில் பல மறைப் போதகர்கள் உள்ளனர்; இவர்கள் இலத்தீன் வழிபாட்டு முறைக்கு மாறியவர்கள்; அல்லது தங்கள் சொந்த வழிபாட்டு முறையின் உறுப்பினராகப் பெயரளவில் மட்டும் இருந்துகொண்டு இலத்தீன் வழிபாட்டு முறையில் மறைபரப்புப் பணி புரிபவர்கள். இவர்களைப் பார்த்ததும் மறைபரப்புப் பணியின் வளர்ச்சியும் பெருக்கமும் இலத்தீன் வழிபாட்டு முறைக்கே உரித்தானது என்று ஒருவர் எண்ணக்கூடும் அல்லவா? கீழைச் சபைகள் நீடிக்குமா என்ற ஐயம் இதனால் எழலாமல்லவா?

கீழைச் சபை அறிஞர் சிலர் (வி. போஸ்பிஷில், 'ஓரியெந்தாலியும் எக்ளேசியாரும்', நியூயார்க், 1965, பக். 6-7) கத்தோலிக்கக் கீழைச் சபைகளைப் பற்றிய இத்தீர்மானத் தொகுப்பில் பெருங் குறைகள் கண்டாலும் இத்தொகுப்பு உண்மையில் ஒரு பெரும் சாதனையே. கிறிஸ்து தங்களிடம் ஒப்படைத்த பொதுப் பணியை எண்ணிப் பார்க்கக் கீழைச் சபையினரையும் இலத்தீன் சபையினரையும் அழைக்கும் இந்த ஏடு சரியான பாதையில் எடுத்துவைக்கப்பட்ட ஓர் அடியாகும். எல்லா வழிபாட்டு முறைகளுமே திருச்சபையினுடையவை; கத்தோலிக்கர் அனைவருக்கும் உரித்தானவை. எல்லாருக்கும் ஆண்டவரான இறைவனின் மாட்சிக்காக இவ்வழிபாட்டு முறைகள் யாவும் வளர்ந்து, மேம்பட்டுச் செழித்தோங்க உரிமை பெற்றுள்ளன.

மேதகு. சக்கரியாஸ் மார் அத்தனேஷியஸ்,
திருவல்லா ஆயர்.

# கத்தோலிக்கக் கீழைச் சபைகள் பற்றி

## இறை அடியார்க்கு அடியார்

# ஆயர் சின்னப்பர்

### திருச்சங்கத் தந்தையரோடு இணைந்து
### நினைவில் என்றும் நிலைக்குமாறு
### அருளிய

## தீர்மானத் தொகுப்பு

### முன்னுரை

1. கீழைச் சபைகளின்* பழக்க வழக்கங்கள், இறைபணி முறைகள், சபைப் பாரம்பரியங்கள், கிறிஸ்தவ வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைக் கத்தோலிக்கத் திருச்சபை உயர்வாக மதிக்கிறது. ஏனெனில், அப்போஸ்தலரிடமிருந்து தந்தையர் வழியாக வரும் பாரம்பரியம்,[1] மதிப்பிற்குரிய பழமையோடு விளங்கும் இவைகளில் தெள்ளத்தெளிவாகக் காணப்படுகிறது. இப்பாரம்பரியம் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட, பிளவுபடாத அனைத்துலகத் திருச்சபையின் பரம்பரைச் செல்வத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. எனவே, இப்பாரம்பரியத்திற்கு உயிருள்ள சான்றுகளாய் விளங்கும் கீழைச் சபைகள்மீது பொதுச் சங்கம் அக்கறை காட்டுகிறது. மேலும், இவை செழித்தோங்கவும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை அப்போஸ்தலிக்கப் புத்துணர்வோடு நிறைவேற்றவும் இது விரும்புகிறது. அனைத்துலகத் திருச்சபையைச் சார்ந்தவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் தீர்மானித்து, ஏனையவற்றைக் கீழைச் சபைகளினுடையவும் அப்போஸ்தலிக்க ஆட்சி பீடத்தினுடையவும் மேற்பார்வைக்கு விட்டு விடுகிறது.

---

* 1964ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 21ஆம் நாள் பிரகடனப் படுத்தப்பட்ட இத்தொகுப்பு "**கீழைச்சபைகள்—எக்ளேஸியாரும் ஓரியென்தாலியும்**" எனவும் பெயர் பெறும். இலத்தீனில் 1806 சொற்களைக் கொண்டுள்ள இத்தொகுப்பை 2110 பேர் ஏற்க, 39 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர்.

1. 13ஆம் சிங்கராயரின் 'ஓரியென்தாலியும் திஞ்ஞித்தாஸ்' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், நவ. 30, 1894; 13ஆம் சிங்கராயரின் நடவடிக்கைகள், பிரிவு XIV, பக். 201-202.

## தனிப்பட்ட சபைகள் அல்லது வழிபாட்டு முறைகள்

2. கிறிஸ்துவின் மறையுடலாகிய புனித கத்தோலிக்கத் திருச்சபை ஒரே விசுவாசம், ஒரே திருவருட்சாதனங்கள், ஒரே ஆட்சிமுறை ஆகியவற்ருல் பரிசுத்த ஆவியில் உறுப்புக்களாக இணைந்துள்ள விசுவாசிகளைக் கொண்டிருக்கிறது. பல்வேறு குழுக்களாக இருக்கும் இவர்கள் திருஆட்சி அமைப்பால் ஒன்றுபட்டுத் தனிப்பட்ட சபைகளாக அல்லது வழிபாட்டு முறைகளாக அமைகின்றனர். இச்சபைகளுக்குள் எத்தகைய வியத்தகு ஒன்றிப்பு இருக்கிறதென்ருல் திருச்சபையிலிருக்கும் இவ்வேற்றுமை அதன் ஒற்றுமையை வெளியிடுகிறதே தவிர அதற்கு யாதொரு தீங்கும் வருவிப்பதில்லை. ஏனெனில், ஒவ்வொரு தனிப்பட்ட சபையின் அல்லது வழிபாட்டு முறையின் பாரம்பரியங்களையும் முழுமையாகக் காக்கவேண்டும் என்பது கத்தோலிக்கத் திருச்சபையின் எண்ணம். இதேபோல் வெவ்வேறு கால, இடத் தேவைகளுக்கு ஏற்பத் தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பதையும் கத்தோலிக்கத் திருச்சபை விரும்புகின்றது.[2]

3. மேற்கிலும் கிழக்கிலுமுள்ள இத்தனிப்பட்ட சபைகள் தங்கள் வழிபாட்டு முறைகளில், அதாவது இறைபணி, திருச்சபை ஒழுங்கு முறை, ஞான பரம்பரைச் செல்வம் ஆகியவற்றில், தமக்குள் சிறிது வேறுபட்டுள்ளன. இருப்பினும், இச்சபைகள் யாவும் உரோமை

---

2. காண். புனித 9ஆம் சிங்கராயரின் 'இன் தெர்ரா பாக்ஸ்' எனும் மடல் (1053) 'உத்தெனிம்'; 3ஆம் மாசில்லாமணி, 4ஆம் இலாத்தரன் சங்கம் (1215), அதி. 4: 'லீச்செத் கிரேக்கோஸ்'; அவரது 'இன்தர் க்வாத்துவோர்' எனும் மடல், ஆக. 2, 1206: 'போஸ்துலாஸ்தி போஸ்த்மோதும்'; 4ஆம் மாசில்லாமணி எழுதிய 'கும்தே சேத்தெரோ' எனும் திருமுகம், ஆக. 27, 1247; 'சுப் கத்தோலிச்சே' எனும் மடலின் முன்னுரை, மார்ச் 6, 1254; 3ஆம் நிக்கோலாசின் 'இஸ்துத் எஸ்த் மெமோரியாலே' எனும் அறிவுரை, அக். 9, 1278; 10ஆம் சிங்கராயர் எழுதிய 'அச்சேப்பிமூஸ் நூப்பர்' எனும் அப்போஸ்தோலிக்க மடல், மே 18, 1521. 3ஆம் சின்னப்பர் எழுதிய 'தூதும்' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், டிச. 23, 1534; 4ஆம் பத்திநாதரின் 'உரோமானுஸ் போந்திfபெக்ஸ்' எனும் கொள்கைத் திரட்டு, பெப். 16, 1564 § 5; 8ஆம் சாந்தப்பரின் 'மாஞ்ஞுஸ் தோமினுஸ்' எனும் கொள்கைத் திரட்டு, டிச. 23, 1595 § 10. 5ஆம் சின்னப்பரின் 'சோலத் சிர்க்கும்ஸ்பெக்தா' எனும் கொள்கைத் திரட்டு, டிச. 10, 1615. § 3; 14ஆம் ஆசிர்வாதப்பர் எழுதிய 'தெமந்தாத்தாம்' எனும் சுற்றுமடல், டிச. 24, 1743 § 3; 14ஆம் ஆசிர்வாதப்பர் எழுதிய 'அல்லாத்தேசுந்த்' எனும் சுற்றுமடல், ஜூன் 26, 1755, §§ 3, 6–19, 32. 6ஆம் பத்திநாதர் எழுதிய 'கத்தோலிச்சே கொம்மூனியோனிஸ்' எனும் சுற்றுமடல், மே 24, 1787; 9ஆம் பத்திநாதர் எழுதிய 'இன் சுப்ரேமா' எனும் மடல்; ஜன. 6, 1848, § 3; அவரின் 'எக்ளேசியாம் கிறிஸ்தி' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், நவ. 26, 1853; 'உரோமானி பொந்திfபிசிஸ்' எனும் கொள்கைத் திரட்டு, ஜன. 6, 1862; 13ஆம் சிங்கராயர் எழுதிய 'ப்ரேக்ளாரா' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், ஜூன் 20, 1894, எண் 7; அவர் எழுதிய 'ஓரியென்தாலியும் திஞ்ஞித்தாஸ்' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகத்தின் முன்னுரை, நவ. 30, 1894; இன்னும் பலவும்.

ஆயரின் மேய்ப்பு ஆளுகைக்கு ஒரே விதத்தில் உட்பட்டிருக்கின்றன. உரோமை ஆயர் புனித இராயப்பரின் வழித்தோன்றல் என்னும் முறையில் அனைத்துலகத் திருச்சபையில் இறை நியமனப்படி முதலிடம் வகிக்கிறார். எனவே, இச்சபைகள் ஒரே வகையான மாண்பு உடைத்தன. இதனால், ஒரு சபையும் மற்ற சபைகளைவிட வழிபாட்டு முறையின் காரணமாக உயர்ந்ததாகாது. அவையனைத்தும் ஒரேவிதமான உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ளன. உரோமை ஆயரின் கண்காணிப்பின்கீழ், அனைத்துலகிலும் நற்செய்தியைப் போதிப்பதிலும்கூட (காண். மாற்கு 16 : 15) சம உரிமைகளையும் கடமைகளையும் பெற்றிருக்கின்றன.

4. ஆகவே, எல்லாத் தனிப்பட்ட சபைகளையும் பாதுகாக்கவும் அவைகளை வளர்ச்சியுறச் செய்யவும் உலகெங்கும் கவனம் செலுத்தப்படவேண்டும்; விசுவாசிகளின் ஆன்மீக நன்மைக்குத் தேவைப்படும் இடங்களில் பங்குகளையும், சொந்த திருஆட்சி அமைப்பையும் நிறுவவேண்டும். ஒரே எல்லைக்குள் ஆட்சி அதிகாரம் பெற்றிருக்கும் பல்வேறு தனிப்பட்ட சபைகளின் தலைமைக் குருக்கள் மறையின் நலனை மிக எளிதாகப் பேணவும், குருகுலத்தாரின் ஒழுங்கு முறைகளை மிகத் திறமையுடன் பாதுகாக்கவும்[3] குறித்த காலங்களில் கூட்டங்கள் நடத்தி ஆலோசனை பெற்று அதிக ஒற்றுமையுடன் செயல்படவும் கவனம் செலுத்தவேண்டும்; ஒன்றித்த ஆற்றலுடன் பொதுப்பணிகளுக்கு உதவி செய்யவேண்டும். குருகுலத்தார் அனைவரையும் திருப்பட்டங்களைப் பெற இருப்பவரையும் வழிபாட்டு முறைகள் பற்றியும் முக்கியமாக வழிபாட்டு முறைகளுக்கு இடையே உள்ள காரியங்களைச் சார்ந்த நடைமுறை விதிகள் பற்றியும் நன்முறையில் அறிவுறுத்தவேண்டும். வழிபாட்டு முறைகளைப் பற்றியும் அவைகளின் விதிகளைப் பற்றியும் மறைக்கல்விப் பயிற்சியில் பொதுநிலையினருக்கும் கற்பிக்கவேண்டும். இறுதியாக, கத்தோலிக்கர் அனைவரும், அவர்கள் ஒவ்வொருவரும், கத்தோலிக்கச் சபையல்லாத வேறு எந்தச் சபையிலாவது சமூகத்திலாவது ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்க ஒன்றிப்பின் நிறைவை அடைபவரும் தங்களுடைய சொந்த வழிபாட்டு முறையை எவ்விடத்திலும் கைக்கொண்டு, வளர்த்து இயன்றவரை கடைப்பிடிக்கவேண்டும்.[4] ஆட்களையோ சமூகங்களையோ நிலப்பகுதி

---

3. காண். 12ஆம் பத்திநாதரின் 'க்ளேரி சாங்திதாத்தி' எனும் சொந்த அறிக்கை, ஜூன் 2, 1957, கண்டனம் 4.

4. 12ஆம் பத்திநாதரின் 'க்ளேரி சாங்திதாத்தி' எனும் சொந்த அறிக்கை, ஜூன் 2, 1957, கண்டனம் 8: "அப்போஸ்தோலிக்கப் பீடத்தின் அனுமதியின்றி," கடந்த நூற்றாண்டுகளின் பழக்கத்தைப் பின்பற்றி, அதேபோன்று, "தாம் விரும்பும் வழிபாட்டு முறையைக் கைகொள்ளலாம்" என்று கண்டனம் 11இல் ஞானஸ்நானம் பெற்ற கத்தோலிக்கரல்லாதாரைப் பற்றி நாம் வாசிக்கிறோம். வழிபாட்டை நடத்துவதற்கு உலகில் அனைவரும் கையாளவேண்டிய ஒரு வழியை இங்கே தரப்பட்டுள்ள பகுதி காட்டுகிறது.

களையோ சார்ந்த தனிப்பட்ட காரியங்களில் அப்போஸ்தல ஆட்சி பீடத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்ளும் உரிமையை இது அழிப்பதில்லை. சபைகளுக்குள் உள்ள தொடர்புகளைச் சார்ந்தவற்றில் ஒப்புயர்வற்ற நடுவர் என்ற முறையில் இந்த அப்போஸ்தலிக்க ஆட்சி பீடம் கிறிஸ்தவ ஒன்றிப்பை விரும்பும் மனத்துடன், தானுகவோ வேறு அதிகாரிகள் வழியாகவோ, தகுந்த ஒழுங்குகளையோ தீர்மானங்களையோ, உறுதிமொழிகளையோ அளித்துத் தேவைகளை நிறைவு செய்கிறது.

## கீழைச் சபைகளின் ஞான பரம்பரைச் செல்வத்தைப் பாதுகாத்தல்

5. அனைத்துலகத் திருச்சபை கீழைச் சபைகளுக்கு எவ்வளவு கடன் பட்டிருக்கிறது என்பதற்கு வரலாறும் பாரம்பரியமும் திருச்சபையின் பற்பல நிறுவனங்களும் தெளிவாகச் சான்று பகருகின்றன.[5] எனவே, இச்சபைகள் கொண்டுள்ள திருச்சபை சார்ந்த ஞான பரம்பரைச் செல்வத்திற்குத் தகுந்த மதிப்பும் முறையான புகழ்ச்சியும் தருவதோடல்லாமல் அதைக் கிறிஸ்துவின் அனைத்துலகத் திருச்சபையின் பரம்பரைச் செல்வமெனவும் திருச்சங்கம் திண்ணமாக எண்ணுகிறது. இதன் காரணமாக, கீழைச் சபைகள் மேலைச் சபைகளைப்போல் தங்களுக்கே உரித்தான தனிப்பட்ட ஒழுங்குமுறைப்படி தங்களையே ஆட்சிபுரியும் உரிமையையும் கடமையையும் கொண்டுள்ளன என்று சிறப்பான முறையில் அறிவிக்கின்றது. மதிக்கப்பட வேண்டிய தங்களது பழமை காரணமாகச் சிறப்புப் பெறும் இவைகள் விசுவாசிகளின் பழக்கவழக்கத்திற்கு அதிகமாக ஒத்திருக்கின்றன; ஆன்ம நலனை வளர்க்க மிகத் தகுதி உடையனவாகவும் காணப்படுகின்றன.

6. தங்களது நேர்மையான இறைபணி முறைகளையும் தங்கள் ஒழுங்குகளையும் எப்பொழுதும் கடைப்பிடிக்க முடியும்; கடைப்பிடிக்கவும் வேண்டும் என்பதைக் கீழைச் சபைகள் அனைத்தும் அறியவேண்டும். அதை உறுதியாக நம்பவேண்டும். உயிரினங்களில் நிகழ்வது போன்று சொந்த வளர்ச்சிக்காகவன்றி, வேறு எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றங்களைத் திணிக்கக்கூடாது என்றும் அவர்கள் அறிய வேண்டும். இவை எல்லாவற்றையும் அவர்களே மிகவும் பற்றுறுதியுடன் கடைப்பிடிக்கவேண்டும். இவைகளை நாளுக்குநாள் அதிகமாக அறியவும் இதனுல் நிறைந்த பலனை அடையவும் வேண்டும். காலம், ஆட்கள் போன்ற சூழ்நிலைகள் காரணமாக இவைகளிலிருந்து தகாத

---

5. காண். 13ஆம் சிங்கராயர் எழுதிய 'ஓரியென்தாலியும் திஞ்ஞித்தாஸ்' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், நவ. 30, 1894; அவரின் 'ப்ரேக்ளாரா ஓக்ராத்துலாஸியோனிஸ்' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், ஜூன் 20, 1894; இத்தோடு குறிப்பு எண் 2இல் தரப்பட்டுள்ள ஏடுகள்.

Q62 N67



முறையில் விலகிச் செல்ல நேரிட்டால் தங்கள் முன்னோரின் மரபுகளின் படி நடக்க முயலவேண்டும். தங்கள் அலுவல் அல்லது அப்போஸ்தலப் பணியை முன்னிட்டு அடிக்கடி கீழைச் சபைகளோடு அல்லது அச்சபையினரோடு தொடர்பு கொண்டுள்ளவர்கள் கீழைச் சபையினரின் வழிபாட்டு முறை, ஒழுங்கு, படிப்பினை, வரலாறு, பண்பு போன்றவற்றில் தங்கள் பணியின் முக்கியத்துவத்திற்கு ஏற்றபடி சரியான அறிவும் நன்மதிப்பும் பெறவேண்டும்.[6] கீழ்த்திசை நாடுகளில் அல்லது கீழைச் சபை விசுவாசிகளிடம் பணிபுரியும் இலத்தீன் வழிபாட்டு முறையைச் சார்ந்த துறவறச் சபைகள், கழகங்கள் அப்போஸ்தல ஆற்றலை அதிகரிக்கும் முறையில் கீழைச் சபை வழிபாட்டு முறையைச் சார்ந்த துறவற இல்லங்களை, மானிலங்களைக்கூட இயன்ற வரையில் அமைக்கத் தூண்டப்படுகின்றன.[7]

## கீழைச் சபை மறைமுதுவர்கள்

7. பழம்பெரும் காலத்திலிருந்தே மறைமுதுவர்களைக்கொண்டிருக்கும் பழக்கம் திருச்சபையில் இருந்து வருகிறது. ஏற்கெனவே முதல் பொதுச் சங்கங்கள் இதை ஏற்றுக்கொண்டுள்ளன.[8]

கீழ்த்திசை மறைமுதுவர் என்ற பெயரானது தனது ஆட்சி எல்லை அல்லது தனது வழிபாட்டுமுறைக்கு உட்பட்டிருக்கும் ஆயர்கள்—பேராயர்களும்கூட—குருகுலத்தார், விசுவாசிகள் ஆகியோர் மேல் ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள ஓர் ஆயரைக் குறிக்கும். இவ்வதிகாரம் சட்ட ஒழுங்குக்குட்பட்டு உரோமை ஆயரின் முதன்மைக்கு இடையூறு வருவிக்காமல் இருக்கவேண்டும்.[9]

மறைமுதுவரின் ஆட்சி எல்லைக்கு வெளியே உள்ள ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையைச் சார்ந்த தலைமைக் குரு எங்கு இருந்தாலும் சட்ட ஒழுங்குப்படி அதே வழிபாட்டு முறை மறைமுதுவரின் ஆட்சி வட்டாரத்தைச் சேர்ந்திருப்பார்.

---

6. காண். 15ஆம் ஆசீர்வாதப்பரின் 'ஓரியெந்திஸ் கத்தோலிச்சி' எனும் சொந்த அறிக்கை, அக். 15, 1917; 11ஆம் பத்திநாதர் எழுதிய 'ரேரும் ஓரியென்தாலியும்' எனும் சுற்றுமடல், செப். 8, 1928. இன்னும் பலவும்.

7. 11ஆம் பத்திநாதர், 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர் ஆகியோரின் காலத்திய கத்தோலிக்கப் பழக்கம் இவ்வியக்கத்தைத் தெளிவாக விளக்குகிறது.

8. காண். முதல் நீசேயா சங்கம், கண். 6; முதல் கான்ஸ்தாந்திநோபிள் சங்கம், கண். 2-3; கால்சதோன் சங்கம், கண். 28; கண். [illegible]9; 4ஆம் கான்ஸ்தாந்திநோபிள் சங்கம், கண். 17; கண். 21; 4ஆம் [illegible]தரன் [illegible]ம், கண். 5; கண். 30; புளோரென்ஸ் சங்கத்தின் 'ப்[illegible]க்[illegible]சஸ்'. இ[illegible]ம் பிறவும்.

9. காண். முதல் நீசேயா சங்கம், கண். 6; முதல் கான்ஸ்தாந்திநோபிள் சங்கம், கண். 3; 4ஆம் கான்ஸ்தாந்திநோபிள் சங்கம், கண். 17; 12ஆம் பத்திநாதரின் 'க்ளேரி சங்தித்தாத்தி' எனும் சொந்த அறிக்கை, என். 216, § 2, 1[illegible].

220731

8. கீழைச் சபை மறைமுதுவர்களில் சிலர் மற்றவர்களுக்குப் பிறகு நியமிக்கப்பெற்றிருப்பினும் மறைமுதுவர் என்ற முறையில் சமமாண்பைப் பெற்றுள்ளனர். இருப்பினும், இம்மறைமுதுவர்களில் சிலருக்குச் சட்ட முறையாக மற்றவரைவிட உயர் மதிப்பு அளிக்கும் பழக்கம் நிலை நிற்க வேண்டும்.[10]

9. தங்கள் ஆட்சிக்குட்பட்டிருப்பவர்களுக்குத் தந்தையும் தலைவருமாயிருப்பதால் திருச்சபையின் பழம்பெரும் பாரம்பரியத்தின்படி கீழைச் சபை மறைமுதுவரை தனிப்பட்ட முறையிலே மதிக்க வேண்டும்.

எனவே, இத்திருச்சங்கம் ஒவ்வொரு சபையின் பழங்கால மரபுகளுக்கும் பொதுச்சங்கங்களின் தீர்மானங்களுக்கும் ஏற்றாற்போல்[11] மறைமுதுவர்களுக்கு உரித்தான உரிமைகளையும் சலுகைகளையும் புதுப்பிக்க வேண்டும் என அறிவிக்கிறது.

தற்கால நிலைமைகளுக்கு ஏற்றபடி சிறிது தழுவியமைக்கப்பட வேண்டியனவாயிருப்பினும் கிழக்கும் மேற்கும் ஒன்றித்திருந்த சமயத்தில் செழித்தோங்கியவையே இவ்வுரிமைகளும் சலுகைகளும்.

மறைமுதுவர்கள் தங்கள் மன்றங்களோடு சேர்ந்து, தங்கள் ஆட்சி வட்டாரத்தில் நிகழும் எல்லாக் காரியங்களின் மேலும் உயர்நத அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். அத்தோடு புதிய மேற்றிராசனங்களை உருவாக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. அதே சமயத்தில் தங்கள் ஆட்சி வட்டாரத்தின் எல்லைக்குள் தம் வழிபாட்டு முறை ஆயர்களை நியமிக்கும் உரிமையும் அவர்களைச் சார்ந்தது. ஆனால், ஒவ்வொரு காரியத்திலும் தலையிடுவதற்கு உரோமை ஆயர் கொண்டுள்ள மாற்றமுடியாத உரிமைக்கு ஊறு நேரக்கூடாது.

10. மறைமுதுவர்களைப் பற்றி இங்குக் கூறப்பட்டவைகள் சட்ட ஒழுங்குப்படி தனிப்பட்ட சபை அல்லது ஒரு வழிபாட்டு முறை முழுவதற்கும் தலைமையாயிருக்கும் உயர் பேராயர்களுக்கும் பொருந்தும்.[12]

11. மறைமுதுவர்களின் வழியாகவே கீழைச் சபைகள் பரம்பரையாக ஆளப்பட்டு வருவதால், தேவையான இடங்களில் புதிய மறை

---

10. காண். முதல் நீசேயா பொதுச் சங்கத்தில், கண். 6; முதல் கான்ஸ்தாந்திநோபிள் பொதுச் சங்கத்தில். கண். 3; 4ஆம் கான்ஸ்தாந்திநோபிள் பொதுச் சங்கத்தில், கண். 21; 4ஆம் இலாத்தரன் பொதுச் சங்கத்தில், கண். 5; புளோரென்ஸ் பொதுச் சங்கத்தின் 'ப்ரோ ஓக்ரேச்சிஸ்' எனும் தீர்மானத் தொகுப்பு, ஜூலை 1439 § 9; காண். 12ஆம் பத்திநாதரின் 'க்ளோரி சாங்கிதாத்தி' எனும் சொந்த அறிக்கை, ஜூன் 2, 1957, எண். 219. இவையும் பிறவும்.

11. காண். மேலே கூறிய குறிப்பு எண். 8.

12. எபேசுச் சங்கம், கண். 8. 7ஆம் சாந்தப்பரின் 'தேச்செத் உரோமானும் பொந்திfபிச்செம்' பெப். 23, 1596; 7ஆம் பத்திநாதரின் 'இன் உனிவெர்ஸாலிஸ் எக்ளேஸியே' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம், பெப். 22, 1807; 12ஆம் பத்திநாதரின் 'க்ளேரி சாங்திதாத்தி' எனும் சொந்த அறிக்கை, ஜூன் 2, 1957, எண். 324-339, கர்த்தேஜ் சங்கம், (419) கண். 17.

முதுவர் ஆட்சி வட்டாரங்களை நிறுவ புனிதப் பொதுச் சங்கம் விரும்புகிறது. ஆனால், இவ்வட்டாரங்களை அமைக்கும் உரிமை பொதுச் சங்கத்திற்கு அல்லது உரோமை ஆயருக்குத்தான் உண்டு.[13]

## திருவருட்சாதனங்களைப் பற்றிய ஒழுங்குகள்

12. திருவருட்சாதனங்களைப் பற்றிய கீழைச் சபையின் ஒழுங்குகளையும் அந்தத் திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவதிலும் வழங்குவதிலும் உள்ள நடைமுறையையும் புனிதப் பொதுச்சங்கம் உறுதிப்படுத்திப் புகழுகின்றது; தேவையாயிருந்தால் அவைகளை மீண்டும் நடைமுறைக்குக் கொணர விரும்புகிறது.

13. கீழைச் சபைகளில் பண்டைக்காலந்தொட்டுக் காணப்படும் புனித பரிமள எண்ணெய் வழங்கும் பணியாளரைப் பற்றிய ஒழுங்கு முறையை முற்றிலும் நடைமுறைக்குக் கொணர வேண்டும். மறை முதுவரால் அல்லது ஆயரால் மந்திரிக்கப்பட்ட இவ்வெண்ணெயைப் பயன்படுத்திக் குருக்கள் இந்த திருவருட்சாதனத்தை வழங்கலாம்.[14]

14. கீழைச் சபைக் குருக்கள் அனைவரும் எந்த வழிபாட்டு முறையையும்—இலத்தீன் வழிபாட்டு முறையையும்கூட—சார்ந்த எல்லா விசுவாசிகளுக்கும் ஞானஸ்நானத்தோடோ தனியாகவோ இந்தத் திருவருட்சாதனத்தைச் செல்லத்தக்க வகையில் வழங்க முடியும். இதனை அனுமதிக்கப்படும் முறையில் வழங்கத் தனி, பொதுச் சட்டங்

---

13. காண். கர்த்தேஜ் சங்கம் (419) கண். 17 & 57; கால்சேதோன் சங்கம் (451) கண். 12. புனித முதலாம் மாசில்லாமணி எழுதிய 'எத் ஒனுஸ் எத் ஒனேர்' எனும் மடல் a. c. 415; 'நாம் குய்த் ஷஷித்தாரிஸ்'; புனித முதலாம் நிக்கோலாஸ் எழுதிய 'அத் கொன்ஸுல்த்தா வெஸ்த்தரா' எனும் மடல், நவ. 13, 866: 'அ கோ ஔத்தம்'; 3ஆம் மாசில்லாமணி எழுதிய 'ரெக்ஸ் ரேகும்' எனும் மடல், பெப். 25, 1204; 12 ஆம் சிங்கராயர் எழுதிய 'பேத்ருஸ் அப்போஸ்தொலோரும் பிரின்செப்ஸ்' எனும் அப்போஸ்தோலிக்கக் கொள்கைத் திரட்டு, ஆக. 15, 1824; 12ஆம் சிங்கராயர் எழுதிய 'கிறிஸ்தி தோமினி' எனும் அப்போஸ்தோலிக்கத் திருமுகம் (1895); 12ஆம் பத்திநாதரின் 'க்ளேரி சாங்தித்தாத்தி' எனும் சொந்த அறிக்கை, ஜூன் 2, 1957, கண். 159.

14. காண். 4ஆம் மாசில்லாமணி எழுதிய 'சுப் கத்தோலிச்சே' எனும் மடல், மார்ச் 6, 1254 § 3, எண் 4; 2ஆம் இலயன்ஸ் சங்கம் (1274) (பத்தாம் கிரகோரியாரிடம் மிக்கேல் பலேயோலோகோஸ் அளித்த விசுவாச அறிக்கை); 4ஆம் யூஜின் புளோரென்ஸ் சங்கத்தில் வெளியிட்ட 'எக்ஸுல்தாத்தே தேயோ' எனும் கொள்கைத் திரட்டு நவ. 22, 1439 § 11; 8ஆம் சாந்தப்பரின் 'சாங்திஸ்ஸிமுஸ்' எனும் அறிவுரை, ஆக. 31, 1595; 14ஆம் ஆசீர்வாதப்பரின் 'எத்ஸி பாஸ்தொராலிஸ்' எனும் கொள்கைத் திரட்டு மே 26, 1742 § II, எண் 1, § III எண் 1, இவையும் பிறவும். இலாவோதிசியா சங்கம் (347-381) கண். 48; அர்மேனியரின் சிசன் சங்கம் (1342); மாரோணித்தாரின் லிபானன் சங்கம் (1736) P. II அதி. III, எண் 2, இன்னும் பிற தனிப்பட்ட சங்கங்கள்.

களின் ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.[15] இலத்தீன் வழிபாட்டு முறையைச் சார்ந்த குருக்களும், இந்தத் திருவருட்சாதனத்தை நிறைவேற்றுவதற்காகத் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு கீழைச் சபை விசுவாசிகளுக்குக்கூட, அவர்கள் வழிபாட்டு முறையைப் பாதிக்காதவாறு, இதனை வழங்க முடியும். இதனை அனுமதிக்கப்படும் முறையில் வழங்கத் தனி, பொதுச் சட்டங்களின் ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.[16]

15. ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருவிழா நாட்களிலும் இறை பணியிலோ, அவரவர் வழிபாட்டு முறையின் ஒழுங்குப்படி அல்லது வழக்கத்தின்படி இறைபுகழ்க் கொண்டாட்டங்களிலோ பங்குகொள்ள விசுவாசிகள் கடமைப்பட்டுள்ளவர்கள் ஆவார்கள்.[17] விசுவாசிகள் இக்கடமையை மிக எளிதாக நிறைவேற்றுவதற்கு முந்திய நாள் மாலையிலிருந்து ஞாயிறு அல்லது திருவிழா முடிவுவரை உள்ள காலம் தகுதியான நேரமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.[18] இந்நாட்களில் அடிக்கடி, ஏன், நாள்தோறுங்கூட, திவ்விய நற்கருணையை உட்கொள்ள விசுவாசிகள் அறிவுறுத்தப் பெறுகிறார்கள்.[19]

16. பல்வேறு தனிப்பட்ட சபைகளைச் சார்ந்த விசுவாசிகள் ஒரே கீழைநாட்டு வட்டாரத்திலோ நிலப்பகுதியிலோ ஒவ்வொரு நாளும் கலந்து வாழவேண்டியிருக்கிறது. எனவே, தங்கள் தலைமைக் குருக்களிடமிருந்து முறையாகவும் வரையறையின்றியும் பாவசங்கீர்த்தனம் கேட்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ள எந்த வழிப்பாட்டு முறையைச்

---

15. காண். திரு அலுவலகத்தின் அறிவுரை (1783); விசுவாச பரம்புதல் சபை, மார்ச் 15, 1790, எண் XIII; தீர்மானத் தொகுப்பு, அக். 6, 1863, C. a.; கீழைச் சபைகளுக்கான திருக்குழு, மே 1. 1948; திரு அலுவலகத்தின் பதிலும் ஏப். 22, 1896—திரு அலுவலகம் எழுதிய மடலும் மே 19, 1896.

16. தி. ச. தொ. இல். சட். 782 § 4; கீழைச் சபைகளுக்கான திருக்குழுவின் தீர்மானத் தொகுப்பு. தங்கள் வழிபாட்டுமுறை விசுவாசிகளுக்கு உறுதிபூசுதல் அளிக்கச் சலுகை பெற்ற இலத்தீன் வழிபாட்டுமுறைக் குருக்கள் கீழைச் சபை விசுவாசிகளுக்கு உறுதிபூசுதல் எனும் திருவருட்சாதனத்தை வழங்குவது பற்றி மே 1, 1948.

17. காண். இலாவோதியா சங்கம் (347–381), கண். 29; புனித நிசேஃபோரஸின் CP அதி. 14; அர்மேனியரின் தூயினென் சங்கம் (719), கண். 31; புனித தியோதோரின் ஸ்துதித்தாவின் மறையுரை 21; புனித முதலாம் நிக்கோலாஸ் எழுதிய 'அத் கொன்ஸுல்தா வெஸ்த்ரா' எனும் மடல் நவ. 13, 866: இன்னும் தனிப்பட்ட சங்கங்கள்.

18. புனித இறைபணியில் பங்கெடுக்கும் கடமை உள்ள இடங்களிலாவது இது புதிது; பிறருக்கோ, கீழைச் சபையாரிடையே இது இறைபணி நாளுடன் தொடர்புடையது.

19. காண். 'கனோனஸ் அப்போஸ்தலோரும்' 8, 9; அந்தியோக்கியா சங்கம் (341), கண். 2; அலெக்ஸாந்திரிய திமோத்தி வினா 3; 3ஆம் மாசில்லாமணியின் 'குய்யா திவினே' எனும் கொள்கைத் திரட்டு ஜன. 4, 1215; இன்னும் பற்பல தனிப்பட்ட அண்மைகாலத்துக் கீழைச் சங்கங்கள்.

சார்ந்த குருக்களும் தங்களுக்கு அதிகாரம் அளித்தவரின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி முழுவதிலும் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாம். மேலும், அவ்விடத்துத் தலைமைக்குரு, தம் வழிபாட்டு முறையைச் சார்ந்த இடங்களைப் பொறுத்தவரை வெளிப்படையாக மறுத்தால் தவிர,[20] அதே நிலப்பகுதியில் எல்லா இடங்களிலும் எந்த வழிபாட்டு முறையையும் சார்ந்த விசுவாசிகளின் மேலும் தங்களது அதிகாரத்தை அவர்கள் செயல்படுத்தலாம்.

**17.** கீழைச் சபைகளிலுள்ள குருத்துவம் எனும் திருவருட்சாதனத்தின் பழங்கால ஒழுங்குகளை அவைகளில் மீண்டும் தழைத்தோங்கச் செய்யும் நோக்குடன் எங்கெல்லாம் நிலையான திருத்தொண்டர் நிலை வழக்கொழிந்துள்ளதோ அங்கெல்லாம் அதை மீண்டும் நடைமுறைக்குக் கொணர இத்திருச்சங்கம் விரும்புகிறது.[21] துணைத் திருத்தொண்டர் மற்ற கீழ்ப்பட்டங்கள், அவைகளைச் சார்ந்த உரிமைகள், கடமைகள் நிலை, அனைத்தையும் தீர்மானிக்கும் பொறுப்பு ஒவ்வொரு தனிப்பட்ட சபையின் சட்டமியற்றும் அதிகாரத்தைச் சார்ந்தது.[22]

**18.** கீழைச் சபைக் கத்தோலிக்கர்கள், ஞானஸ்நானம் பெற்றிருந்தும் கத்தோலிக்கரல்லாக் கீழைச் சபையினரோடு திருமணம் புரியும் போது செல்லாத் திருமணங்களைத் தவிர்க்கவும் அத்திருமணங்களின் உறுதிப்பாட்டையும் புனிதத்தன்மையையும் இல்லற வாழ்வின் அமைதியையும் பேணிக் காக்கவும் எண்ணங்கொண்டு திருச்சபையின் திருமணமுறை, முறையாக மணம்புரிவதற்கு மட்டுமே தேவையெனத் திருச்சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தகைய திருமணங்கள் செல்லத் தக்கவையாக விளங்க பிற விதிகளைக் கடைப்பிடிப்பதுடன்[23] திருப்பணியாளர் முன் நடைபெறுதல் போதும்.

---

*20.* ஆட்சி எல்லையைப் பாதுகாப்பதோடு, ஆன்மாக்களின் நலனுக்காக ஒரே நிலப்பகுதியில் பல்வகை ஆட்சிமுறைக்கு வழிகோல வேண்டுமென ஒழுங்கு விரும்புகிறது.

*21.* காண். முதல் நிசேயா சங்கம், கண். *18*; நேயோசெசாரேயா சங்கம் (*314-325*), கண். *12*; ஸார்திக்கா சங்கம் (*343*), கண். *8*; புனித பெரிய சிங்கராயர் எழுதிய 'ஓம்னியும் குய்தெம்' எனும் மடல், ஜூன் *13, 444*; கால்செதோன் சங்கம், கண். *6*; *4*ஆம் கான்ஸ்தாந்திநோபிள் சங்கம், கண். *23, 26*. இன்னும் பிறவும்.

*22.* பல கீழைச் சபைகளில் துணைத் திருதொண்டர்நிலை கீழ்ப்பட்டமெனக் கருதப்படுகிறது. ஆனால் *12*ஆம் பத்திநாதர் தனது 'க்ளேரி சாங்திதாத்தி' எனும் சொந்த அறிக்கையினால் உயர்பட்டங்களுக்குரிய கடமைகளை அதற்குத் தந்துள்ளார். துணைத் திருத்தொண்டர்களின் பழம் ஒழுங்கிற்கு விதித் திரும்பச்செல்லுகிறது. எனவே, 'க்ளேரி சாங்திதாத்தி'யின் இதுபற்றிய பொதுச்சட்டம் மாறியுள்ளது.

*23.* காண். *12*ஆம் பத்திநாதர் எழுதிய 'க்ரேப்ரே அல்லாத்தே' எனும் சொந்த அறிக்கை, பெப். *22, 1949*, கண். *32* § *2*, எண் *5*: (திருச்சபையின் திருமணமுறையிலிருந்து ஒருவருக்கு விதி விலக்களிப்பதற்காக மறைமுதுவர் கொண்டுள்ள அதிகாரம்); *12*ஆம் பத்திநாதர் எழுதிய 'க்ளேரி சாங்திதாத்தி' எனும் சொந்த

## இறைவழிபாடு

19. இனிமேலாகக் கீழைச் சபைகள் அனைத்திற்கும் பொதுவான திருவிழாக்களை ஏற்படுத்துவது, அவைகளை மாற்றுவது அல்லது நிறுத்துவது போன்றவை பொதுச்சங்கத்திற்கோ அப்போஸ்தல ஆட்சிபீடத்திற்கோ உரித்தானது. அப்போஸ்தலிக்க ஆட்சி பீடத்தைத் தவிர மறைமுதுவர்களின் அல்லது பேராயர்களின் மன்றங்களும் ஒவ்வொரு தனிப்பட்ட சபைகளுக்கும் திருநாட்களை ஏற்படுத்தவும் மாற்றவும் நிறுத்தவும் உரிமைகொண்டுள்ளன. அதேவேளையில், முழு மண்டலத்தினுடையவும் ஏனைய தனிப்பட்ட சபைகளுடையவும் நலனை அவைகள் கருத்தில் கொள்ளவேண்டும்.[24]

20. உயிர்ப்புத் திருவிழாவைக் குறிப்பிட்ட ஒரே நாளில் அனைவரும் கொண்டாடுவதிலும், இதற்கிடையில் ஒரே மண்டலம் அல்லது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதிலும் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒரே முடிவுக்கு வருவது விரும்பத்தக்கதாகும். இந்நிலை வரும்வரை மறைமுதுவர்கள் அல்லது அந்தந்த இடத்து சபைகளின் ஒப்புயர்வற்ற அதிகாரிகள், யார் யாருடைய ஆலோசனைகளைக் கேட்க வேண்டுமோ அவைகளைக் கேட்டு, ஒரே ஞாயிறன்று உயிர்ப்பு விழாவைக் கொண்டாட ஒருமனதாய் உடன்பட வேண்டும்.[25]

21. தங்களது வழிபாட்டு முறையைச் சார்ந்த நிலப்பகுதிக்கோ வட்டாரத்திற்கோ வெளியே வாழும் ஒவ்வொரு விசுவாசியும் புனித காலங்களுக்கான சட்டங்களைப் பொறுத்தவரை, தான்வதியும் இடத்தின் ஒழுங்குகளை முழுவதும் அனுசரிக்கலாம். பற்பல வழிபாட்டு முறைகளைக் கொண்ட குடும்பங்களில் ஏதாவதொரு வழிபாட்டு முறைப்படி இவ்வொழுக்கங்களை அனுசரிக்கலாம்.[26]

---

*அறிக்கை, ஜூன் 2, 1957, கண். 267. திருச்சபையின் திருமண முறையிலிருந்து விதிவிலக்களிக்கவும், இம்முறையைக் கடைப்பிடிக்காது புரிந்த திருமணங்களைச் சீர்படுத்தவும் திரு அலுவலகமும், கீழைச் சபைகளுக்கான திருக்குழுவும் 1957 இல் அதிகாரம் அளித்துள்ளன.*

*24. காண். புனித பெரிய சிங்கராயர் எழுதிய 'கோத் செப்பிஸ்ஸிமே' என்ற மடல், ஏப். 15, 454: 'பெத்திசியோனம் ஔத்தம்'; புனித நிசேபோருஸ் CP அதி. 13; மறை முதுவரான செர்ஜியுசின் சங்கம், செப். 18, 1596; கண். 17; ஆரும் பத்திநாதர் எழுதிய 'அஸ்ஸுவேத்தோ பத்தேர்னே' என்ற அப்போஸ்தோலிக்கத் திருமுகம், ஏப். 8, 1775 இன்னும் பலவும்.*

*25. காண். 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் புனித இறைபணி பற்றிய கொள்கைத் திரட்டு, டிச. 4, 1963.*

*26. காண். 8ஆம் சாந்தப்பரின் 'சாங்திஸ்ஸிமுஸ்' என்னும் அறிவுரை, ஆக. 31, 1595, § 6: 'சி இப்சி கிரேச்சி'; திரு அலுவலகம், ஜூன் 7, 1673, ad 1, 3; மார்ச் 13, 1727, ad 1; விசுவாசப் பரம்புதல் சபையின் தீர்மானத் தொகுப்பு, ஆக. 18, 1913, பிரிவு 33; தீர்மானத் தொகுப்பு, ஆக. 14, 1914, பிரிவு 27; தீர்மானத் தொகுப்பு, மார்ச் 27, 1916, பிரிவு 14; கீழைச் சபைகளுக்கான திருக்குழுவின் தீர்மானத் தொகுப்பு, மார்ச் 1, 1929., பிரிவு 36; தீர்மானத் தொகுப்பு, மே 4, 1930, பிரிவு 41.*

22. பழங்காலத்திலிருந்து எல்லா கீழைச் சபைகளாலும் மிக உயர்வாக மதிக்கப்பட்டுவரும் திருப் புகழ்மாலையைத் தங்கள் ஒழுங்கு முறைகள், பாரம்பரியம் ஆகியவற்றிற்கேற்பக் கீழைச் சபைக் குருக்களும் துறவிகளும் செபிக்கவேண்டும்.[27] தங்களது முன்னோர்களின் வழி நடந்து விசுவாசிகளும் தங்களால் இயன்றவரை திருப்புகழ்மாலையில் பக்தியுடன் பங்கடைதல் வேண்டும்.

23. இறைபணித் திருச்செயல்களில் மொழிகளின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தல், அப்போஸ்தலிக்க ஆட்சிபீடத்தோடு தொடர்பு கொண்டு, அந்தந்த இடத்துமொழி இறைபணிச் செயல்களுக்கு ஒப்புதல் அளித்தல் ஆகிய உரிமைகளை மறைமுதுவர், தம் மன்றத்தோடு இணைந்தும், ஒவ்வொரு சபையின் உயர் அதிகாரிகள், தலைமைக் குருக்களின் சங்கத்தோடு இணைந்தும் கொண்டுள்ளனர்.[28]

## பிரிந்த சபைச் சகோதரர்களோடு உறவு கொள்ளல்

24. கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கம் பற்றி இத்திருச்சங்கம் தந்துள்ள தீர்மானத் தொகுப்பின் அடிப்படை விதிகளுக்கேற்பக் கிறிஸ்தவர் அனைவரிடையேயும் சிறப்பாகக் கீழைச் சபையினரிடையேயும் ஒற்றுமையை வளர்க்கும் தனிப்பட்ட பணி உரோமை அப்போஸ்தலிக்க ஆட்சிபீடத்தோடு ஒன்றித்திருக்கும் கீழைச் சபைகளைச் சார்ந்தது. செபம், வாழ்வின் முன்மாதிரி, கீழைச் சபைகளின் தொன்மையான பாரம்பரியத்தின்மேல் சமயப் பிரமாணிக்கம், ஒருவர் ஒருவரைப் பற்றிய தெள்ளிய அறிவு, ஒத்துழைப்பு, பொருட்களையும் கருத்துக்களையும் சகோதர மனப்பான்மையோடு மதிப்பிடுதல் ஆகியவற்றின் வழியாய் இப்பணியை நிறைவேற்ற வேண்டும்.[29]

25. பிரிந்துசென்ற கீழைச் சபையினர் பரிசுத்த ஆவியின் அருளால் தூண்டப்பட்டுக் கத்தோலிக்கருடன் ஒன்று சேரும்போது சுருக்கமான கத்தோலிக்க விசுவாச அறிக்கையின் கோரிக்கைகளைத்

---

27. காண். இல்வோதிசேயா சங்கம், 347-381, கண். 18; *Syn. Mar-Issaci Chaldaeorum* (410), கண். 15, அர்மேனியர்களின் புனித நெர்செஸ் கிளெய்ன் (1166); 4ஆம் மாசில்லாமணி 'சுப் கத்தோலிச்சே' எனும் திருமுகம் மார்ச் 6, 1254, § 8; 14ஆம் ஆசீர்வாதப்பர் எழுதிய 'எத்சி பாஸ்தோராலிஸ்' என்ற கொள்கைத் திரட்டு, மே 26, 1742, § 7, எண் 5; 'எயோ குவாம்விஸ் தெம்பொரே' என்ற அறிவுரை, மே 4, 1745, §§ 42 தொ; அண்மைக் காலத்துச் சங்கங்கள்: அர்மேனியாரின் சங்கங்கள் (1911), கோப்தர்களின் சங்கங்கள் (1898), மரோணித்தாரின் சங்கங்கள் (1736), உருமேனியாரின் சங்கங்கள் (1872), உருத்தர்களின் சங்கங்கள் (1891), சிரியர்களின் சங்கங்கள் (1888).

28. கீழைப் பாரம்பரியத்திலிருந்து எடுக்கப்பட்டது.

29. கத்தோலிக்கக் கீழைச் சபைப் பற்றிய ஆணை ஓலையின் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டது.

தவிர வேறு அதிகமாக எதையும் அவர்களிடமிருந்து நாம் எதிர் பார்க்கக்கூடாது. இவர்களிடம் உண்மையான குருத்துவம் உள்ளது. எனவே, கத்தோலிக்கத் திருச்சபையோடு ஒன்றுசேரும் இக்கீழைச் சபைக் குருகுலத்தார் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் வரையறுக்கப் பட்ட ஒழுங்குகளின்படி தங்கள் குருத்துவத்தைச் செயல்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளனர்.[30]

26. திருச்சபையின் ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிப்பதும், தவறான கொள்கையை அறிந்து ஏற்றுக்கொள்ளச் செய்வதும், விசுவாசத்தை விட்டுப்பிரிந்து இடறலுக்கும் எல்லாம் சரி எனும் கொள்கைக்கும் இட்டுச் செல்லும் ஆபத்தை விளைவிப்பதுமான பிறவழிபாட்டில் பங்குகொள்ளலை இறைச் சட்டம் தடுக்கிறது.[31] ஆனால், நமது கீழைச் சபைச் சகோதரர்களைப் பொறுத்தமட்டில் திருச்சபையின் ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்காததும், தவிர்க்கவேண்டிய ஆபத்துக்களைத் தன்னுள் கொண்டிராததும் மீட்பின் தேவை, ஆன்ம நலன் ஆகியவற்றைத் தூண்டக்கூடியதுமான ஒவ்வொரு மனிதனுடையவும் சூழ்நிலைகளைக் கவனிக்கமுடியும்; கவனிக்கவும் வேண்டுமென மேய்ப்புப் பணி அனுபவம் சுட்டிக் காட்டுகிறது. ஆகையால்தான் கத்தோலிக்கத் திருச்சபையானது காலம், இடம், மக்கள் போன்ற சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மிகச் சாந்தமான முறையில் அடிக்கடிச் செயல்புரிந்துள்ளது; இன்னும் செயல்புரிந்தும் வருகிறது. அத்தோடு, திருவருட்சாதனங்கள், மற்ற புனித அலுவல்கள், பொருட்கள் ஆகியவற்றில் பங்குபற்றுவதின் மூலம், மீட்பின் வழிவகைகளையும் கிறிஸ்தவர்களிடம் திகழும் பரம அன்பின் சான்றையும் எல்லாருக்கும் திருச்சபை அளிக்கிறது. இவைகளை மனதில் கொண்டு, "கடுமையான நம் தீர்ப்புக்களினால் மீட்பைப் பெறுகிறவர்களுக்கு நாம் தடையாக இருக்கக்கூடாது".[32] நம்மிடமிருந்து பிரிந்திருக்கும் கீழைச் சபைகளோடு ஒன்றிப்பை அதிகமாக வளர்க்கவேண்டும். இந்நோக்கங்களைக் கண்முன்கொண்டு திருச்சங்கம் கீழ்வரும் செயல்முறைகளைத் தீர்மானித்துள்ளது.

27. மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை விதிகளை நினைவில் கொண்டு கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து தங்கள் குற்றம் ஏதுமின்றிப் பிரிந்திருக்கும் கீழைச் சபையினர் தாங்களாகவே தக்க தயாரிப்போடு விரும்பின், அவர்களுக்குப் பச்சாத்தாபம், நற்கருணை, நோயில் பூசுதல் ஆகிய திருவருட்சாதனங்களை வழங்கலாம். தேவை

---

30. பிரிந்துபோன கீழைச் சகோதரர்கள்மட்டிலும் இறைவனின் சட்டம், திருச்சபையின் சட்டம் ஆகியவற்றின்படி எல்லா நிலைகளிலும் உள்ளோரின்மட்டிலும் சங்கத்தின் கடமை.

31. இந்தக்கோட்பாடு பிரிந்துபோன சபைகளிலும் உண்டு.

32. புனித பெரிய பேசில் அம்பிலோக்கியனுக்கு எழுதிய சட்ட பூர்வமான திருமுகம். கி. த. 32, 669 B.

ஏற்பட்டாலோ, உண்மையிலேயே ஆன்ம நலனுக்கு அவசியம் என்றாலோ ஒரு கத்தோலிக்கக் குருவை யாதொரு விதத்திலும் அணுக முடியாத நிலை ஏற்பட்டாலோ கத்தோலிக்கரும் மேற்கூறிய திருவருட் சாதனங்களை கத்தோலிக்கரல்லாத் திருப்பணியாளரிடமிருந்து பெறலாம்.[33] ஆனால், அத்திருப்பணியாளர் பின்பற்றும் சபையானது உண்மையான திருவருட்சாதனங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

28. இதேபோல், மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை விதிகளை முன்னிட்டுப் புனித அலுவல்கள், பொருட்கள், இடங்கள் ஆகியவற்றில், கத்தோலிக்கரும் பிரிந்த கீழைச்சபை சகோதரர்களும் சேர்ந்து பங்குபெறுவது தகுந்த காரணங்கள் இருப்பின் அனுமதிக்கப் பெறுகிறது.[34]

29. பிரிந்த கீழைச்சபைச் சகோதரர்களின் வழிபாட்டில் பங்கு கொள்வது பற்றிய கொள்கையைத் தளர்த்தும் பணி இடத்துத் தலைமைக் குருக்களின் கவனத்திற்கும் கண்காணிப்பிற்குமே விடப்பட்டுள்ளது. தக்க, பயனளிக்கக்கூடிய சட்டங்கள், விதிகள் ஆகியவை மூலம் கிறிஸ்தவர்களிடையேயுள்ள உறவைக் கண்காணிப்பதே இப்பணியின் நோக்கம். இவ்வாறு செய்வதற்குமுன் கத்தோலிக்கத் தலைமைக் குருக்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்வதோடு, தேவைப்பட்டால் பிரிந்த சபைகளின் தலைமைக் குருக்களுடன் கலந்து பேசுவது நலம்.

## முடிவுரை

30. கத்தோலிக்க மேலை, கீழைச்சபைகள், பயனளிக்கும் முறையில் ஆர்வமுடன் ஒத்துழைப்பதைக் கண்டு திருச்சங்கம் பெரிதும் களிப்புறுகின்றது. அதே வேளையில், பிரிந்திருக்கும் கீழைச் சபைகளும் கத்தோலிக்கத் திருச்சபையும் முழுமையாய் ஒன்றிக்கும்வரை இன்றைய நிலைமைக்காகவே இச்சட்டமுறைகள் யாவையும் தீர்மானிப்பதாகச் சங்கம் அறிக்கையிடுகிறது.

இதற்கிடையில் புனிதமிகு இறையன்னையின் துணைகொண்டு எல்லாரும் ஒன்றிப்பதற்காகக் கீழை மேலைக் கிறிஸ்தவர்கள் யாவரும் நாளும் விடாமுயற்சியுடன் உருக்கமாக இறைவனிடம் மன்றாட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், துன்ப

---

33. இவ்வாறு சட்டத்தைத் தளர்த்தியதின் காரணங்கள்: (1) அவர்களது திருவருட்சாதனங்கள் உண்மையானவை; (2) நல்ல விசுவாசமும் தயாரிப்பும்; (3) நித்திய மீட்பின் தேவை; (4) தம் சொந்தக் குரு இல்லாதிருத்தல்; (5) தவிர்க்கவேண்டிய ஆபத்துக்களை நீக்கலும், தவறுகளுக்கு இரையாகாமல் தடுத்தலும்.

34. இவ்வெண் 'திருவருட்சாதனங்களுக்கு வெளியில் பிறவழிபாட்டில் பங்கு கொள்ளலைப்' பற்றியது. 'தகுந்த காரணங்கள் இருப்பின்' என்று கூறிச் சங்கம் விதியைத் தளர்த்துகிறது.

துயரங்களில் கிறிஸ்துவின் பெயரை அயராது அறிக்கையிடும் எல்லாச் சபைகளையும் சார்ந்த கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் தேற்றுகிறவராகிய பரிசுத்த ஆவி ஊக்கத்தையும் ஆற்றலையும் நிறையப் பொழியுமாறு இறைஞ்சவேண்டும்.

நாம் ஒருவரை ஒருவர் மதிப்பதிலே முந்திக்கொண்டு, சகோதர வாஞ்சையுடன் ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுவோம்
(உரோ. 12 : 10).

இத்தீர்மானத்தொகுப்பில் கூறப்பட்டுள்ளன யாவும், அவை ஒவ்வொன்றும், திருச்சங்கத் தந்தையரின் இசைவைப் பெற்றுள்ளன. நாமும், கிறிஸ்து நமக்கு அளித்துள்ள அப்போஸ்தலிக்க அதிகாரத்தால் வணக்கத்துக்குரிய தந்தையருடன் இணைந்து பரிசுத்த ஆவியில் அவைகளை ஆமோதிக்கிறோம், தீர்மானிக்கிறோம், நிலைநாட்டுகிறோம். சங்கம் நிலைநாட்டிய இவை யாவையும் இறைவனின் மாட்சிக்காகப் பிரகடனப்படுத்தும்படி ஆணையிடுகிறோம்.

புனித இராயப்பர் பேராலயம்,
உரோமை.
*நவம்பர் 21, 1964.*
கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்,
## சின்னப்பர்.

கீழே தந்தையரின் கையொப்பங்கள் தொடர்கின்றன.

## மறைச் சொற்கள்

அப்போஸ்தலிக்க ஆட்சி பீடம் (அப்போஸ்தல ஸ்தானம்)—Apostolic See
இறைபணி முறை (தேவாராதனை முறை)—Liturgical rite
இறை வழிபாடு—Divine cult
உரோமை ஆயர்—Roman Pontiff
கிறிஸ்தவ ஒன்றிப்பியக்கம்—Ecumenical movement
கீழைச் சபைகள்—Oriental churches
குருகுலத்தார்—Clerics
தலைமைக் குரு—Hierarch
தனிப்பட்ட சபைகள்—Particular churches
திரு ஆட்சி அமைப்பு—Hierarchy
திருத்தொண்டர்—Deacon
திருவருட்சாதனம் (தேவதிரவிய அனுமானம்)—Sacrament
துணைத் திருத்தொண்டர் நிலை—Subdiaconate
பரம்பரைச் செல்வம்—Heritage
பாரம்பரியம் (மரபு)—Tradition
பிறவழிபாட்டில் பங்குகொள்ளல்—Communicatio in sacris
பேராயர்—Archbishop
பொது நிலையினர்—Laity
மறை முதுவர் (பிதாப்பிதா)—Patriarch
மறை முதுவர் ஆட்சி வட்டாரம்—Patriarchate
மேலைச் சபை—Western church
வழிபாட்டு முறை (ரீதி)—Rite

## சுருக்கக் குறியீடுகள்

அ. ஆ. ந. (A. A. S.)—அப்போஸ்தல ஆட்சிபீட நடவடிக்கைகள்
இ. த. (P. L.)—இலத்தீன் தந்தையர்
காண். (Cfr.)—காண்க
டென். (Den.)—டென்சிங்கர்
தி. ஆ. ந. (A. S. S.)—திரு ஆட்சிபீட நடிவடிக்கைகள்
தொ. (S)—தொடர்ச்சி

6A
9-94

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## கொள்கைத் திரட்டுக்கள்

1. திருச்சபை
2. இறை வெளிப்பாடு
3. இறைபணி
4. இன்றைய உலகில் திருச்சபை

## தீர்மானத் தொகுப்புக்கள்

1. சமூகத் தொடர்புக் கருவிகள்
2. கிறிஸ்தவ ஒன்றிப்பு
3. கத்தோலிக்கக் கீழைச் சபைகள்
4. திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப் பணி
5. குருத்துவப் பயிற்சி
6. தழுவியமைத்துத் துறவற வாழ்வைப் புதுப்பித்தல்
7. பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்
8. குருக்களின் வாழ்வும் பணியும்
9. திருச்சபையின் மறை பரப்புப் பணி

## அறிக்கைகள்

1. கிறிஸ்தவக் கல்வி
2. திருச்சபைக்கும் பிற மறைகளுக்குமுள்ள தொடர்பு
3. மறைச் சுதந்திரம்

வேண்டுவோர்

கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்

**சங்க ஏடுகள்,**

புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி,

அஞ்சல் பெட்டி — 36, திருச்சி - 1.